## மன்னார்குடி நகராட்சி

# சாதாரணக்கூட்டம்

நிகழும் விளம்பி வருடம் ஆடி மாதம் – 9ம் தேதி (2018 ம் வருடம் ஜூலை– 25 ந் தேதி) புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலக வளாகத்தில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அது சமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### பொருள்கள்

| | | |
|---|---|---|
| பொருள் எண்.1 | நகராட்சி ஆணையர் அவர்களின் ஜூன் – 2018 மாதத்திற்கான நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்.567 பதிவு செய்யப்பட்டது |
| பொருள் எண்.2 | நகராட்சி நகர்நல அலுவலர் அவர்களின் ஜூன் – 2018 மாதத்திற்கான நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது | தீர்மான எண்.568 பதிவு செய்யப்பட்டது |
| பொருள் எண்.3 | நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜூன் – 2018 மாதத்திற்கான நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது | தீர்மான எண்.569பதிவு செய்யப்பட்டது |
| பொருள் எண்.4 | மன்னார்குடி நகராட்சியில் 25 இடங்களில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு 11 நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு 11 குடிநீர் விநியோக மண்டலங்களாக பிரிக்கப்பட்டு தினசரி 6.05 MLD சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொது மக்களுக்கு 90 LPCD என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சியில், மொத்தமுள்ள 16252 குடியிருப்புகளில் 11028 குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 7342 குடியிருப்புகளுக்கு புதியதாக குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிக்காக TUFIDCO மூலம் வட்டியில்லா கடனாக ரூ.250.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>மேலும் 29.06.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்ட நடவடிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க அனைத்து பகுதிகளுக்கும் தினமும் சீரான | தீர்மான எண்.570 அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | குடிநீர் வழங்க ஏதுவாக தற்போதுள்ள குடிநீர் விநியோக முறையை (Distribution System) சரிசெய்து அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான குடிநீர் அழுத்தத்துடன் கூடிய விநியோக முறையாக (District Metering Area) (DMA) மாற்றி அமைக்க கலந்தாலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், மேலும் இதற்கான செலவினத்தை Project Development Grant Fund (PDGF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**(ந.க.எண்.3335/2018/இ1)** | |
| பொருள் எண்.5 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30 பழைய ஹவுசிங் யூனிட் பூங்காவில் உற்பத்தியாகும் இடத்திலேயே குப்பையை உரமாக்க கட்டிடம் கட்டும் பணிக்கு (Onsite Compost Shed) தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.3920/2018/இ1)** | தீர்மான எண்.571 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |
| பொருள் எண்.6 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 கே.எஸ்.எஸ் பூங்காவில் உற்பத்தியாகும் இடத்திலேயே குப்பையை உரமாக்க கட்டிடம் கட்டும் பணிக்கு (Onsite Compost Shed) தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. .<br><br>அலுவலக குறிப்பு: மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.3921/2018/இ1)** | தீர்மான எண்.572 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |

பொருள் எண்.7

இந்நகராட்சிக்குட்பட்ட 11 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், இரண்டு தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் பணிபுரிய பூங்கா காவலர் ஒரு வருடத்திற்கு பகல் மற்றும் இரவுநேர பணி பார்த்தல் பணிக்கு 18.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1. | திரு என். மாரிமுத்து<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி. | மதிப்பீட்டை விட 0.37 % குறைவு |
| 2. | திரு எஸ். மோகன்<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி. | மதிப்பீட்டை விட 0.75 % அதிகம் |

அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3923/2018/இ1)

தீர்மான எண்.573
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

பொருள் எண்.8

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைகளை கணிணியில் பதிவேற்றம் செய்யும் பணிக்கு 18.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1. | திரு எஸ். மோகன்<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி. | மதிப்பீட்டிற்கு சமம் |
| 2. | திரு என். மாரிமுத்து<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி. | மதிப்பீட்டை விட 0.60 % அதிகம் |

.

அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில்

தீர்மான எண்.574
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3922/2018/இ1) | |
| பொருள் எண்.9 | இந்கராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்திவரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க மேற்கொள்ளப்பட்ட சட்ட திருத்தம் திருவாரூர் மாவட்ட அரசிதழிலில் வெளியிடப்பட்டுள்ளது.<br>மேற்படி அரசிதழ் மன்றத்தின் பார்வைக்கும் பதவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1629/2018/அ1) | தீர்மான எண்.575 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |
| பொருள் எண்.10 | சொத்துவரி பெயர்மாற்றம் செய்தல் குறித்து திருமதி தமிழரசி என்பவரால் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற வழக்கு WP.No.18384/2018 ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வழக்காட திரு P. சீனிவாசன், உயர்நீதி மன்ற வழக்கறிஞர் என்பவரை நியமித்து வழக்காட அனுமதிப்பது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி வழக்கு தொடர்பான வழக்கு கட்டணம் மற்றும் இதர செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனிஅலுவலரின் முன்அனுமதியுடன் மேற்படி வழக்கில் ஆஜராகி வாதாட அனுமதித்ததை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.1347/2017/அ1) | தீர்மான எண்.576 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |
| பொருள் எண்.11 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரித்து சேகரிப்பு தொடர்பாகவும் மற்றும் சுகாதார கேடுகளிலிருந்து மக்கள் நலனை பாதுகாப்பது குறித்து பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பர பதாகைகள் 8 X 6 அளவில் 33 இடங்களில் அமைத்திட ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.50,000/—க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | தீர்மான எண்.577 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.12 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில்பணிபுரியும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பயன்பாட்டிற்கு 2018–2019 நிதியாண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி பயன்படுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | தீர்மான எண்.578 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |
| பொருள் எண்.13 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 50 X 6545 டிராக்டர் வாகனத்திற்கு முன்பக்கம் உள்ள இரண்டு டயர்கள் மற்றும் டியூப்கள் பழுதுகள் ஏற்பட்டு வாகனம் இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு புதிதாக இரண்டு டயர்கள் மற்றும் டியூப்கள் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.8,500/–க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.3679/2018/இ1) | தீர்மான எண்.579 அலுவலக குறிப்பு ஏற்பு. |
| பொருள் எண்.14 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் குப்பை சேகரிக்கும் டெம்பர் பிளேசர் வாகனம் எண்.TN50X7312 தகுதிச்சான்று பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,23,200/– மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.533 நாள்.31.05.2018 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br><br>மேற்படி பணிகள் தொடர்பாக 13.07.2018 அன்று உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்.580 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன. |

| வ. எண். | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | ஏ. ஆனந்தராஜ், ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், நடுவாணியத் தெரு , மன்னார்குடி | ரூ.1,23,200/– |
| 2. | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மன்னார்குடி | ரூ.1,26,545/– |

அலுவலக குறிப்பு: 1. மேலே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1 ல் கண்டுள்ள நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2358/2018/எச்1)

---

பொருள் எண்.15

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பிரிவில் பராமரிக்கப்பட்டுவரும் குப்பை சேகரிக்கும் காம்பாக்டர் வாகனம் எண்.TN50 U 9435 தகுதிச்சான்று பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,54,500/– மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.559 நாள்.29.06.2018 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிகள் தொடர்பாக 13.07.2018 அன்று உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | ஏ. ஆனந்தராஜ், ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், நடுவாணியத் தெரு , மன்னார்குடி | ரூ.1,54,448/– |
| 2. | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மன்னார்குடி | ரூ.1,62,250/– |

அலுவலக குறிப்பு:

1. மேலே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1 ல் கண்டுள்ள நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3490/2018/எச்1)

தீர்மான எண்.581 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன.

பொருள் எண்.16

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு நோய் தடுப்பு பணிகள் 2018–2019ம் ஆண்டிற்கு கொசு உற்பத்தி செய்யும் இடங்களை கண்டறிந்து அழிக்கவும் இது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு கணக்கெடுப்பு பணிக்கு தேவையான படிவங்கள் அச்சடித்து பயன்படுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண். 529 நாள்.31.05.2018 ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு 17.07.2018 ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனம் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | லெட்சுமி பிரிண்டர்ஸ், மன்னார்குடி | 9,800 /– |
| 2. | வைரம் பிரிண்டர்ஸ், மன்னார்குடி | 9,900 /– |
| 3. | எஸ்.டி.ஆர். பிரிண்டர்ஸ், மன்னார்குடி | 9,500/– |

அலுவலகக்குறிப்பு :–

1. மேலே வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண்.3 ல் கண்ட எஸ்.டி.ஆர் பிரிண்டர்ஸ், மன்னார்குடி நிறுவனத்தின் மிக குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதனையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2819/2018/எச்1)

தீர்மான எண்.582
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| பொருள் எண்.17 | இந்நகராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் கீழ்வரும் விபரப்படியுள்ள வாகனங்களுக்கு வாகனம் கண்காணிக்கும் இயந்திரம் (Vechicle Tracking system ) GPS வாகனங்களில் பொருத்தி இயக்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1. பொது சுகாதாரப் பிரிவு வாகனங்கள் – 10<br>2. பொறியியல் பிரிவு வாகனங்கள் – 4<br>---------<br>கூடுதல் 14<br>---------<br>அலுவலகக்குறிப்பு :– மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.2358/2018/எச்1) | தீர்மான எண்.583 அலுவலக குறிப்பு ஏற்பு. |
| பொருள் எண்.18 | இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பிளாஸ்டிக் பயன்பாடு தடைசெய்வது குறித்து அரசாணை எண்.84 சுற்றுசுழல் மற்றும் வனத்துறை நாள்.25.06.2018ன் படி மன்னார்குடி நகர எல்லைக்குள் ஒரு முறை மட்டும் பயன்படுத்தி வீசி எறிய கூடிய பிளாஸ்டிக் பொருட்களை விபரத்தினை பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பர பதாகைகள் 6 X 4 அளவில் 20 இடங்களில் அமைத்திட ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.25,000/–க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :– மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.3892/2018/எச்1) | தீர்மான எண்.584 அலுவலக குறிப்பு ஏற்பு. |
| பொருள் எண்.19 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறாக தெருக்களில் சுற்றிதிரியும் நாய்கள் (ஆண்–588,பெண்–599) 1187 என கணக்கெடுக்கப்பட்டுள்ளது. எனவே கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள 1187 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை (ABC) மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.8,31,000/–ற்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :–<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. கருத்தடை சிகிச்சை பணியினை கடந்த 2015–2016, 2016–2017 நிதியாண்டுகளில் People for animals charitable Trust, Kumbakonam என்ற நிறுவனம் மேற்கொண்டுள்ளதால் தற்பொழுது மேற்படி நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.585 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன. |

| | | |
|---|---|---|
| | | |
| பொருள் எண்.20 | இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் தினசரி குடியிருப்பு பகுதிகளில் வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து அவற்றினை ஒவ்வொரு தெருவிலும் 10 வீடுகளில் பெறப்படும் குப்பைகளினை எடை அளவீடு செய்து சேகரம் செய்திட தராசு இயந்திரம் 10 வாங்கி பயன்படுத்திட உத்தேச செலவினம் ரூ.4,900/–க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :– மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | தீர்மான எண்.586 அலுவலக குறிப்பு ஏற்பு. |
| பொருள் எண்.21 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 50 A1968 டிப்பர் வாகனத்திற்கு 23.08.2018 உடன் தகுதிச்சான்று உரிமம் முடிவடைந்துள்ளதால் மேலும் ஓராண்டிற்கு தகுதிச்சான்று பெற்றிட ஏதுவாக வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.4080/2017/எச்1) | தீர்மான எண்.587 அலுவலக குறிப்பு ஏற்பு. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.22 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் 2018–2019ம் நிதியாண்டிற்கு டெங்கு நோய் தடுப்பு பணிகள் மற்றும் டெங்குபுழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழிக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் உத்திரவின்படி 33 நபர்களை கொண்டு தினக்கூலி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.12.00 இலட்சத்திற்கு மேற்கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மான எண்.531 நாள்.31.05.2018 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது.<br><br>மேலும் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட தினக்கூலி அடிப்படையில் இந்நகராட்சியில் பதிவு பெற்ற நிலவேம்பு மக்கள் சேவை நகராட்சி சுயஉதவிக்குழு பணியினை மேற்கொள்ள சம்மதக் கடிதம் கொடுத்துள்ளது. எனவே டெங்கு நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் மற்றும் பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு நிலவேம்பு மக்கள் சேவை நகராட்சி சுயஉதவிக்குழு மூலம் நேரடியாக பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. டெங்கு நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>(ந.க.எண்.2816/2018/எச்1) | தீர்மான எண்.588 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன. |
| பொருள் எண்.23 | . இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள அம்மா உணவகத்தில் நீராவி பாய்லர், இட்லி டிரே, அரிசி அரைக்கும் இயந்திரம், உளுந்து அரைக்கும் இயந்திரம், பாய்லர் பைப் லைன், CCTV கேமரா பொருத்துதல், கதவு ஜன்னல் பராமரிப்பு பணிகள், மின்சாதனப் பொருட்கள் பராமரிப்பு செய்தல், இயந்திரங்கள் பழுது நீக்கம் செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 24.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**வ. எண்.** / **வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி** / **ஒப்பந்தப்புள்ளி சதவீதம்**<br>1. / திரு எஸ். மோகன் ஒப்பந்ததாரர், மன்னார்குடி. / மதிப்பீட்டை விட 0.10 % குறைவு | தீர்மான எண்.589 அலுவலக குறிப்பு ஏற்பு. |

| | | |
|---|---|---|
| | <table><tr><td>2.</td><td>திரு எஸ். முத்துக்குமரன்<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.37 % அதிகம்</td></tr></table><br>அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.4011/2018/இ1) | |
| பொருள் எண்.24 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 ஆர்.பி.சிவம் நகர் உரக்கிடங்கில் குப்பைகளை எரித்து அரைத்து, உரமாக்க பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் (Central Processing Unit Machineries) இயங்குவதற்கு தேவையான Electrical Work செய்யும் பணிக்கு 24.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr><tr><td>1.</td><td>திரு எஸ். மோகன்<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.22 % குறைவு</td></tr><tr><td>2.</td><td>திரு என். மாரிமுத்து<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.66 % அதிகம்</td></tr></table><br>அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3545/2018/இ1) | தீர்மான எண்.590<br>அலுவலக குறிப்பு ஏற்பு. |

<table>
<tr>
<td>பொருள் எண்.25</td>
<td>மன்னார்குடி நகராட்சி பகுதியில் உருவாகும் குப்பைகளை அந்தந்த பகுதிகளில் உரம் தயாரிக்க நுண்ணுரம் தயாரிப்பு மையம் (Micro Compost Centre) வார்டு எண்.32 டெப்போ சாலையில் அமைக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.498 நாள்.18.05.2018ல் ரூ.41.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி மேற்படி பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.42.32 இலட்சத்திற்கு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.591<br>அலுவலக குறிப்பு ஏற்பு.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.26</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாமலைநாதன் குளம், யானை விழுந்தான் குளம், பெத்தபெருமாள் கோயில் குளம், ருக்மணி குளம், கோபிராளயம் குளம், செங்குளம் மற்றும் வண்ணான்குளம் ஆகிய குளங்களை JCB மற்றும் Hitachi இயந்திரம் மூலம் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு 24.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு என். மாரிமுத்து<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 1.03 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு எஸ். மோகன்<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 3.70 % அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>(ந.க.எண்.3960/2018/இ1)</td>
<td>தீர்மான எண்.592<br>அலுவலக குறிப்பு ஏற்பு.</td>
</tr>
</table>

(ஒம்) திரு கோ. இளங்கோவன், டி.சி.இ.,
தனி அலுவலர்
மன்னார்குடி நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையர் (பொ)
மன்னார்குடி நகராட்சி